TAMIL NADU LEGISLATURE
1 - OCT 1971
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1970 மார்ச் 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 429, 430 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அரியமங்கலத்துக்கு அரசு மருத்துவமனை

* 431 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சிராப்பள்ளி நகருக்கு அருகாமையிலுள்ள அரியமங்கலத்திற்கு ஒரு அரசாங்க கிளை மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. வை. சுவாமிநாதன்: திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் 22-6-66-ம் தேதிக் கூட்டத்தில் இதுமாதிரி ஒரு ஆஸ்பத்திரி அவசியம் என்று வலியுறுத்தி சிபார்சு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? அதை மீண்டும் புனர்பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மருத்துவ பொதுநலத்துறை இயக்குநர் அவர்கள் அப்படிப்பட்ட வரைவுத்திட்டம் எதுவும் தன்னிடம் வந்து சேரவில்லை என்று குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் அப்படிப்பட்ட திட்டம் எதுவும் வந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை.

Government Hospital at Jayankondacholapuram

* 432 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) Whether the Government propose to upgrade the Government dispensary at Jayankondacholapuram into a full fledged taluk headquarters hospital; and

(*b*) if so, the estimated cost of construction of this new hospital?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) அரசு ஆணை எண். 2420, பொதுப்பணித்துறை நாள் 14-11-1968-ல் 40 படுக்கைகள் கொண்ட தாலுக்கா தலைமை மருத்துவமனை ஒன்றை ஜெயங்கொண்ட சோழபுரத்தில் சுமார் ரூ. 3.70 லட்சம் செலவில் கட்ட ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வேலை தற்சமயம் நடந்தேறி வருகிறது.

[1970 மார்ச் 18

திரு. கே. விநாயகம் : இந்த வேலை எந்தத் தேதிக்குள் பூர்த்தியாகும்? எப்போது அதற்குத் திறப்பு விழா செய்வார்கள்? அதில் சிகிச்சைபெற வருகிற நோயாளிகள் எப்போது அனுமதிக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த ஆஸ்பத்திரி 40 படுக்கைகள் கொண்டதாக, இருபது படுக்கைகள் ஆண்களுக்கும், இருபது படுக்கைகள் பெண்களுக்கும் என்று கட்டப்பட்டிருக்கிறது.

இப்போது கட்டப்பட்டிருப்பது.

Men Ward : Work is in the basement level. Grill work for plinth area is being done.

Women Ward : Work is in the basement level. Grill work for plinth area is being done.

சமையல் அறை மற்ற கட்டடங்கள் எல்லாம் கூறைபோடும் அளவிற்கு வந்திருக்கிறது. விரைவில் திறக்கப்பட்டு அது பணிபுரிய ஆரம்பிக்கும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : திருச்சிராப்பள்ளி தலைமை ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி காரணமாக மிகவும் அவஸ்தைப்படுகிற காரணத்தினால் அதை விஸ்தரிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போடவும்.

Smallpox research work.

* 433 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to State the details of the World Healh Organisation Aid to Infectious Diseases Hospital for smallpox research work?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: உலகச் சுகாதார நிறுவனம் பெரிய அம்மை நோய் ஆராய்ச்சிக்காகத் தொற்றுநோய் மருத்துவமனைக்கு ரொக்கமாக அல்லது பொருளாக எந்த உதவியும் நேரடியாக அளிக்கவில்லை. ஆனால் அது தற்போது மருத்துவ ஆராய்ச்சி இந்தியக் கழகம், சென்னை மாநகராட்சி மன்றச் சுகாதார அதிகாரியின் பொறுப்பில் தொற்றுநோய் மருத்துவமனையில் நடத்தி வருகின்ற பெரிய அம்மை ஆராய்ச்சிப் பணிக்கு இந்திய அரசின் மூலமும், மருத்துவ ஆராய்ச்சி இந்திய மன்றம் மூலமும் ரொக்கமாகவும், கருவிகளாகவும், உதவி வழங்கி வந்துள்ளது.

தொற்றுநோய் மருத்துவ மனையிலுள்ள ஆய்வுக் கூடத்தின் தொற்று நச்சுத் தன்மை ஆய்வுப் பிரிவுக்குத் தேவையான கருவிகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ள உலகச் சுகாதார நிறுவனம் அமெரிக்காவிலிருந்து வந்த பேராசிரியர் கெம்பிக்கும், லிவர்பூலிருந்து வந்த பேராசிரியர் டௌனிக்கும் 1962-ம் ஆண்டில் நிதி உதவி அளித்தது. இந்த நிதி உதவி அந்தப் பிரிவில் பணியாளர்களை நியமிக்கவும் பெரிய அம்மை குறித்துப் பலகோணங்களில் ஆராய்ச்சி நடத்தவும் அளிக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி 1967-ம் ஆண்டு வரை தொடர்ந்து நடந்து வந்தது.

மருத்துவ ஆராய்ச்சி இந்தியக் கழகம் 1964-ம் ஆண்டில் இதற்கிடையில் ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை தொற்றுநோய் மருத்துவ மனையில் தொடங்கியது. மருத்துவமனையில் அப்பொழுதிருந்த கண்காணிப்பாளர் (தற்போது சென்னை